தவக்காலம் 3ஆம் ஞாயிறு திருப்பலி
A ஆண்டு - 8 மார்ச் 2026

தவக்காலத்தின் 3ஆம் ஞாயிறு A ஆண்டு மார்ச் 8 2026
முதல் வாசகம் : வி ப 17: 3-7
2ஆம் வாசகம்: உரோ 5:1-2, 5-8
நற்செய்தி வாசகம்: யோவா 4:5-42

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து தமது வாழ்வை நம்மோடு பகிர்ந்துக் கொள்கிறார். அவரது முடிவில்லாத அன்பு நம்மோடு என்றும் தங்கி இருப்பதாக

முன்னுரை:

இன்றைய வழிபாட்டிற்கு நாம் அனைவரும் கூடி வந்திருக்கிறோம். இந்த வழிபாட்டின் வழியாக நமக்கு வாழ்வம் நல்ல உடல் நலமும் அளித்த இறைவனுக்கு நம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளை செலுத்த வந்திருக்கலாம். ஆனால் ஒருவேளை நாம் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழாததால், இறைவனின் விருப்பத்திற்கு ஏற்ப நடவாததால் மனபாரம் கொண்டவர் களாக அவர் முன் வந்து நிற்பவாகளகவும் இருக்கலாம். அல்லது நமது துணைவர் முன, நம் குழந்தைகள் முன், நம் பணியிடங்ளில், நம் உறவினர் முன் நாம் தோல்வியுற்றவாகளாக எண்ணிக் கொண்டிருக்கலாம். அல்லது நமது வாழ்க்கை நாம் நம்பியதைப் போல இல்லாமல வேறுவிதமாக இருப்பதாக உணர்ந்திருக்கலாம்.

இத்தருணத்தில் நான் எங்கோ படித்த ஒரு நிகழ்வு நினைவிற்கு வருகிறது. ஒரு கிராமத்தில் இருந்த ஒரே ஒரு கிணறும் திடீரென வற்றிவிட்டது. கிணறு வற்றிவிட்டதற்கான காரணத்தை எங்கெங்கோத் தேடினர் கிராம மக்கள். இறுதியாக அந்த கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிறு குழந்தை யாருமே எதிர்ப்பாராத ஒரு மூலையிலிருந்து சிறு ஒட்டைவழியாக தண்ணீர் வெளியேறிக் கொண்டிருப்பதைக் கண்டுப் பிடித்துக் கூறியது. உடனே கிராமத்து மக்கள் அந்த ஒட்டையை சரி செய்தனர். தண்ணீர் வெளியேறவதும் கட்டுப்படுத்தப்பட்டது. கிராம மக்களின் வாழ்வும் மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பியது. அது சற்று மெதுவாக நடந்தாலும் அதில் ஒரு நிச்சயத்தன்மை இருந்தது. இதனால் அந்த கிரமம் முழுவதுமே புத்துணர்வுப் பெற்றது.

கடவுளும் இவ்வாறே நம்மை சந்திக்கிறார். நம்மை யாரும் கண்டுக் கொள்ளவில்லையே என்று நாம் வேதனையில் நொறுங்கிக் கிடக்க நேரிவட்டபோதும், நமக்குள் வெறுமையயை உணரும் தருணங்களில், அவர் நமது தாகத்தை அறிகின்றார். தமது அளப்பறிய அன்பையும் இரக்கத்தையும் நம் விருப்பப்படி அள்ளிப் பருகிட அழைப்பு விடுக்கிறார். நமது இதயங்களையும், ஆன்மாக்களையும் புத்துணர்வடையச் செய்யத் தம் வாழ்வை நம்மோடுப் பகிர்ந்துக் கொண்டு தமது வாழ்வளிக்கும் நீரையும் இயேசு கிறிஸ்து வழியாக வெளிப்படுத்தப்படும் இறையன்பிற்கு நம் மனங்களைத் திறந்து வைப்போம். இறைவனின் முடிவில்லாத அன்பு என்றும் நம்மோடு இருப்பதாக.

பாவ மன்னிப்பு வழிபாடு

தளர்ச்சியுற்ற ஆன்மாக்களுக்கு வழங்கப்படும் வாழ்வின் நீரைப் போல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே, உமது வார்த்தைகளால் எம்மை புத்துணர்வு அடையச் செய்கிறீர் - ஆண்டவரே இரக்கமாயிரும்.

உம்மை விட்டு நாங்கள் அவ்வப்போது விலகி விலகிச் சென்ற அலைந்துத் திரிந்துக் கொணட்டிருக்கும் போதிலும் எங்களைத் தேடிச் செல்வதையும், எங்களைக் கண்டடைவதையும் நிறுத்திக் கொள்ளாமல் தொடர்கின்றீர் - கிறிஸ்துவே இரக்கமாயிரும்.

எங்கள் சோதனைகள் துன்பங்களின் மத்தியில் எங்கள் வாழ்விற்குத் தேவையான சரியான வழிகாட்டலையும் மன வலிமையையும் அளிக்கின்றீர் - ஆண்டவரே இரக்கமாயிரும்.

பாவ மன்னிப்புக்காள இறைவேண்டல்:

நன்மைத்தனமும், நீதியும் கொண்ட, இரக்கத்தையும், அன்பையும் வழங்குவதில் வள்ளலான நம் இறைவன் நம்மை அவரிடமிருந்து பிரிக்கும் அனைத்தையும் மன்னித்தருள்வாராக அவரே நம் இதய்ஙகளை அதன் முன்னிலைக்கு புதுப்பித்து, நமது காயங்களைக் குணமாக்கி, நமது ஆன்மாவிற்கு தமது வாழ்வளிக்கும் நீரையளித்து அதற்குப் புத்துணர்ச்சியை அருளுகிறார். அவரே நம்மை முடிவற்ற நிறை வாழ்வுக்கு இட்டுச் செல்வாராக ஆமென்.

மறையுரை : என்றும் வற்றாத நீர்:

நாம் இப்போது பாட்டில்களில் தண்ணீரை விற்கும் கடைகளுக்குச் சென்றால் உ்மையழலேயே நாம் குழப்பமடைகிறோம் ஏனெனில் பல்வேறு பெயர்களில் தண்ணீர் பாட்டில்கள் விற்கப்படு கின்றன. அவற்றைக் குறித்து பாட்டில்களின் மீது "உங்களை அமைதிப்படுத்த ஒளிரும் நீர" "சோடியம் சத்து குறைந்த நீர்" "உணவு மேசைக்கு உகந்த நீர்", "ஊற்றிலிருந்து எடுக்கப்பட்ட நீர்" என்றப் பல் வேற வர்ணனைகளோடு தண்ணீர் விற்கப்படுகிறது. இதைப் பார்க்கும் போது "எல்லா தண்ணீரும் ஒரே லிதமாக தண்ணீர் அல்ல" என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதை இன்றைய நற்செய்திப் பகுதியோடு இணைத்து தியானிக்கும் போது அது இன்னும் ஆழமான கருத்துகளுக்க இட்டுச் செல்கிறது. யோவான் நற்செய்தியாளர் இன்றைய நற்செய்திப் பகுதியில் சீக்காரில் உள்ள யாக்கோபின் கிணற்றடியில் இயேசுவம் சமாரியப் பெண் ஒருத்தியும் சந்திக்கும் நிகழ்வை சித்தரிக்கிறார். இருவருமே தண்ணீரைக் குறித்தே பேசகிறார்கள். ஒருவரையொருவர் போட்டிப் போட்டு பேசுகிறார்கள். இயேசு "எல்லா தண்ணீரும் ஒரே விதமான தண்ணீர் அல்ல என்கிறார். ஆம் எல்லா விதமான தாகங்களும் ஒரே விதமானவை அல்ல. எல்லா தாகங்களும் நிரந்தரமாகத் தீர்த்து வைக்கப்படக் கூடிவைகளும் அல்ல.

பாலை வெளி. சுட்டெரிக்கும் கதிரவனின் வெம்மை. இந்த நிலையில் வெற்றுக் காலுடன் ஒரு குழந்தை அங்கு ஓடிக்ககொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். அது எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் கனமானதாக உள்ளது. அதன் மூச்சு வெம்மையோடு வெளிவருகிறது. அக்கணத்தில் குழந்தையின் கண்களில் ஒரு கிணறு தென்படுகிறது. உடனே அதன் உள்ளம் நிம்மதியால் நிரம்புகிறது. நம்பிக்கை அதன் வேகத்தை அதிகரிக்கிறது. குழந்தை கிணற்றை அடைகிறது. தன் கையில் இருந்த கோப்பையால் நிரம்பியிருந்த கிணற்ற நீரை மொண்டுக் குடிக்கிறது. அதன் தாகம் உடனே தீர்ந்து விடுகிறது. ஆனாலும் சிறிது நேரம் கழித்து அதற்கு மீண்டும் தாகமெடுக்கிறது. நம் வாழ்வும் இத்தகையதே. நாம் வாழ்வில் சந்திக்கும் பல நிகழ்வுகளான - நமது வெற்றகள். நமது உறவுகள், நம்மிடம் சேர்ந்திருக்கும் பணம், சொத்து வசதிகள் - இவை யாவும் நமக்குத் தார்க்காலிகமான நிம்மதியை திருப்தியை அளிக்கினறன ஆனால் முழுமையான நிறைவைத் தருவதில்லை. உள்ளத்தின் ஆழத்தில் ஒரு தாகம் நிரந்தரமாய் இருந்துக் கொண்டே இருக்கிறது.

இன்றைய நற்செய்தி தாகத்தைப் பற்றியக் கதையை நம் முன் வைக்கிறது. ஆனால் அது உடல்சார் தாகம் அல்ல அது நம் வாழ்விற்கான தாகும் அதாவது இறைவனையும் அவரது அன்பையும் அறிதலான தாகம், சமாரியப் பெண் தண்ணீர் எடுத்துச் செல்ல நண்பகல் வேளையில் தனது தாகத்தைத் தணித்துக் கொள்ள வேண்டிய நீரை எடுத்துக் ொள்ள கிணற்றடிக்கு வருகிறார். அவள் எப்போதும் போலத் தான் கிணற்றடிக்கு வருகிறாள். இயேசுவுடனான சந்திப்பை அவள் சாதாரணமாகவே எண்ணினாள். ஆனால் இயேசுவோ அவளிடம் தனக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்றுக் கேட்கிார். இது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்தாலும் அது ஒரு பெரிய நிகழ்விற்குக் கதவைத் திறந்து வைக்கும் நிகழ்வாக மாறியது.

தண்ணீர் என்பது வெறும் தண்ணீர் மட்டுமல்ல:

முதலில் பார்க்கும் போது அவர்கள் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருப்பதைப் போல் தோன்றுகிறது. அந்தப் பெண் சாதாரண குடிதண்ணீர் குறித்துப் பேசுகிறார். ஆனால் இயேசவோ வாழ்வு தரும் நீரைக் குறித்துப் பேசுகிறார். "நான் தரும் தண்ணீரைக் குடிப்பவர் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது" என்கிறார். நாம் பருகும் சாதாரண குடிநீர் அந்த நேரத்திற்கு நம்மை திருப்திப்படுத்தும். ஆனால் இயேசு அளிக்கும் தண்ணீரோ நம் உள்ளத்தன் ஆழத்திலுள்ள தாகத்தையும் தீர்க்கவல்லது. திருவிலி-யத்தைப் பொறுத்த அளவில் தண்ணீர் என்பது வெறும் தண்ணீரட மட்டுமல்ல என்பதை யோவான் நற்செய்தித் தெளிவுப்படுத்தி விட்டது. அது நமது வாழ்வை, அது புதுப்பிக்கப்படுதலை, இறைவனின்

அன்பை அடையாளப்படுத்துகிறது. திருப்பாடல் 42 இதை மிக அழகாக சித்திரத்துக் காட்டுகிறது -- ''கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல கடவுளே என் நெஞ்சம் உமக்காக ஏங்கித் தவிக்கிறது'' (திபா 42:1).

அந்த சமாரியப் பெண்ணுக்கு ஏற்பட்ட தாகத்தைப் போல நம் எல்லோருக்கும் ஒரு தாகம் உள்ளது. ஒருவேளை நாம் மகிழ்ச்சியின் பொருட்டு, நாம் அங்கீகரிக்கப்பட, அன்பு செய்யப்பட வேண்டும் என்பதில் தாகம் கொண்டிருக்கலாம். நமர் வரண்ட வாழ்வினால், நமக்களிக்கப்பட்ட வாக்குகள் உடைப்பட்டு விட்டதால், நம்மை விட்டு விரைவாக நழுவிச் சென்றும் மகிழ்ச்சீயின் பொருட்டும் நாம் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கலாம். ஆனால் இயேசு நமக்களிக்கும் வாழ்வின் நீர் நம்மை முற்றிலும் மாற்றி, தாகத்துடனான நம் வாழ்வை முழுமையானதாக, களிப்புடையாக, பொருளுள்ளதாக மாற்ற வல்லது.

எதிர்ப்பாராத தூதுவர்:

இன்றையக் கதையின் சிறப்பம்சம் தண்ணீர் மட்டுமல்ல. அந்தப் பெண்ணும் சிறப்பான இடத்தைப் பிடிக்கிறார். அவள் விளிம்புநிலையில் நிற்பவள், மற்றவர்களால் தீர்பிபடப்பட்டவள், குரறத்து மதிப்பீடு செய்யப்பட்டவள். எனவே அவள் எளிதில் கவனிக்கப்படாமல் விடப்பட்டு கடந்து சென்றிருக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இயேசு அவளைத் தம் தூதுவராகத் தேர்ந்தெடுக் கிறார். அவளே புறக்கணிக்கப்பட்டவளாக இருந்தாலும், அவளது தாகம் தணிக்கப்பட்டு, அவள் தான் வாழ்ந்த ஒட்டு மொத்த நகரத்தின் ஊற்றாக மாறிவிட்டாள்.

உண்மை வாழ்விற்கான தாகம்:

மகிழ்ச்சியைத் தேடியே நமது வாழ்வை செலவழிக்கிறோம். நமது உடல் நலத்திற்காக தேடுகிறோம்,, உறவுகளைத் தேடுகிறோம், நமக்கானப் பணிகளைத் தேடுகிறோம், நமது பொழுதுபோக்கிற்கானவை, சில சமயங்களில் வீர சாகசங்களையும் தேடிச் செல்கிறோம். பாலை நிலத்தில் நாம் சந்தித்த குழந்தையைப் போல இவையனைத்தும் நமக்கு தாற்காலிக நிறைவையே அளிக்கின்றன. அவை நிரந்தரமானவை அல்ல. புனிதை அவிலா தெரேசா கூறுகிறார் ''இறைவன் மட்டுமே போதுமானவர்''. புனித அகுஸ்தீனார் ''உம்மிலன்றி வேறு எதிலும் எங்கள் இதயங்கள் அமைதியடைவதில்லை'' என்கிறார்.

இயேசு நம்மை நமது அன்றாட வாழ்வின் சூழல்களில் ''நமது அன்றாடக் கிணற்றடிகளில்'' தான் நம்மை சந்திக்கிறார். அவர் நாம் எங்கிருக்கிறோமோ அங்கேயே வருகிறார். நமது உடைப்பட்ட நிலைகளின் மத்தியில் வந்திருந்து , நமக்கு இவ்வுலகம் தரவியலாத, நமது தாகங்களை தணித்து நம்மை முற்றிலும் மாற்றியமைக்க வல்ல வாழ்வின் நீரை நமக்கு வழங்குகிறார். இத்தவக்காலத்தில் நாம் மேற்கொள்ளும் நோன்பு, இறைவேண்டல், தியானங்கள் ஆகியவை அந்த வாழ்வின் நீரைப் பெற்றக் கொள்ள நம் மனங்களைத் திறந்து விடும் வழிகளாகும். இத்தகைய தாகத்தைக் கண்டுணர முயற்சிக்கும் போது நாம் பல்வேறு கவனச் சிதல்களால் மூழ்கடிக்கப்படுகிறோம்.

தரைமட்டத்திற்கும் கீழே பார்வையை செலுத்துவோம்:

மக்கள் சந்திக்கும் போது பொதுவாகக் கேட்கப்படும் கேள்வி ''எப்படி இருக்கிறீர்கள்?'' என்பது தான். ஆனால் அதற்கான சரியான பதில் அநேகரிடமிருந்துக் கிடைப்பதில்லை. நம்மில் அநேகர் போலித்தனமான முகப்பைக் கொண்டிருக்கிறோம், நாம் யாரோவாக நடிக்க விரும்புகிறோம். நமது துன்பங்கள் போராட்டங்களை மறைத்துக் கொள்ளவே விரும்புகிறோம். ஆயினும் அந்த கிணற்றடியிலிருந்த பெண்ணைப் போல இன்னும் ஆழத்திற்கு செல்வ அழைக்கப்படுகிறோம். இயேசு தரைமட்டத்திற்கும் கீழாகத் தம் பார்வையை செலுத்துகிறார். அவர் நம் ஆழ்மனங்களில் தேங்கியுள்ள நமது மனவிருப்பங்களைக் காண்கிறார், நமது வினாக்களை அவர் செவிகள் கேட்கின்றன, நமது தோல்விகளை அவர் புரிந்துக் கொள்கிறார். இவையனைத்திற்கும் தீர்வாக நமக்குத் தம் வாழ்வின் நீரை அளித்து நம்மை நிறைவிக்கிறார். நாம் எப்போது நமது ஆன்மீகத் தாகத்தை உணர்ந்து அதை ஏற்றுக் கொண்டு இறைவனட அநத தாகத்தை தீர்த்து வைக்க அனுமதிக்கிறோமோ அப்போது தான் நம் ஆன்மீக வாழ்வு சரிான விதத்தில் துவங்குகிறது.

காத்திருத்தலானக் கொடை:

நம் இதயத்தில் எழும் ஒவ்வொருக் காத்திருத்தலும் ஒரு கொடை. ஒரு குழந்தைத் தன் பிறந்த நாளுக்காகக் காத்திருத்தல், ஏதோ ஒரு சாகசம் புரியக் காத்திருக்கும் மாணவனின் காத்திருத்தல், ஒரு நோயாளி தான் சௌகரியமாக இருக்க விரும்பிக் காத்திருத்தல் இவை அனைத்தும் காத்திருக்கும் மனிதர்களின் உள்ளத்தின் ஆழத்தில் உள்ளவற்றிற்கான சிறு குறியீடுகள். கடவுள் இத்தகையக் காத்திருப்புகளை நம் இதயத்தில் விதைககிறார் எனவே தான் நாம் அந்தக் கடவுளை நோக்கி வழிநடக்கிறோம். சமாரியப் பெண் தனதுக் காத்திருப்பை இயேசுவை சந்தித்தப்பின் உணர்ந்துக் கொள்கிறாள். சதாரணமாக தனது தேவைக்காகத் தண்ணீர் மொள்ள வந்த அவளது வாழக்கை அசாதாரணவிதமாக மாற்றம் பெற்றது . மாற்றம் பெற்றது அவள் மட்டுமல்ல அவள் வாழ்ந்த ஊரின் ஒட்டு மொத்த மக்களும் மாற்றம் பெறகிறார்கள்.

மூலாதாரமாக மாற்றம் பெறுதல்:

இயேசு சமாரியப் பெண்ணின் உள்ளார்ந்த தாகத்தை மட்டும் தீர்த்து வைக்கவில்லை. மாறாக அவர் அவளைச் சார்ந்த அனைவரின் தாகமும் தீருவதற்காக மூலதாரமாக, காரக் கர்த்தாவாக மாறுகிறார் . இதுவே மிகவும் உயர்ந்தக் கொடை. நமக்கும் இறைவனுக்குமான சந்திப்பு நமக்குள் மட்டும் உரித்தானது அல்ல. அத்தகைய சந்திப்பு தானாகவே வெளியே பிரவாகமாகப் பொழிந்து ஓடுகிறது. அவ்வாறு நம்மிலிருந்துப் பொங்கி வழிந்தோடும் அந்த வாழ்வின் நீரை நம் குடும்பத்தினர், நண்பர்கள், குழுக்கள் குழுமங்கள், ஏன் நமக்கு அறிமுக மில்லாத மற்ற மனிதர்கள் அனைவரும் அள்ளிப் பருகலாம் - நாம் இறைவனின் அரவணைப்பில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் போது.

மறையுரையை முடிக்கும் முன்பாக ஒரு சிறுகதை:

பல ஆண்டுகளுக்கு முன் நான் கடும் வறட்சிக்குட்பட்டுத் தவித்த ஒரு நகரத்தின் கதையைப் படித்தேன. அதை மறையுரையை நிறைவிக்கும் முன் உங்கள் முன் பகிர விரும்புகிறேன். அந்த ஊரில் இருந்த கிணறுகள் வற்றிவிட்டன. அதே போன்று மக்களின் நமபிக்கையும் குறைந்துக் கொண்டே வந்தது. அந்த ஊதிலிருந்த ஒரு பெண்மணி தன்னிடமிருந்த அழ்துணை தண்ணீர் பம்பின் வழியாக வந்தத் தண்ணீரை அந்த ஊரில் உள்ள மக்கள் அனைவருடன் அவரவருக்கு அளவாகப் பங்கீடு செய்து பகிர்ந்தளித்து வந்தாள். அவளது செய்கை அந்த ஊர் மக்களை ஈர்த்தது. ஊர் மக்கள் அனைவரும் இணைந்து ஒரு குளம் வெட்டினர். தண்ணீர் அதில் வந்தது. ஒரு பெண்ணின் தன்னலமற்ற செயலால் அந்த வறண்ட பாலைவனமும் துளிர்க்கலாயிற்று.

அதுபோலவே இறைவனின் வாழ்வின் நீரானது நம்முள் வருவது நம்மை நிறைவிக்க மட்டுமல்ல மாறாக மற்றவர்களும் அள்ளிப் பருகிடும் ஊற்றாக மாறி அனைவருக்கும் வாழ்வளிக்கிற.து இன்றைய நற்செய்தியின் சமாரியப் பெண் நமக்கு என்ன கற்பிக்கின்றார் என்றால் சாதாரண கணங்கள், சாதாரண மனிதர்கள். திறந்த மனத்துடனும் அன்போடும் செய்யப்படும் சிறிய செயல்களும் கூட இறைவனின் கரம் பட்டவுடன் அவை அசாதாரணமானவைகளாக மாறி விடுகின்றன.

எனவே அன்பான சகோதர சகோதரிகளே இந்த தவக்காலத்தில் நாம் அந்த வாழ்வின் நீரைத் தேடுவோம். நாம் மேலெழுந்தவாரியாக நாம் இருப்பதை விடுத்து ஆழத்திற்குச் செல்வோம். நமது தாகத்தை நாம் தழுவிக்கொள்வோம். நாம் பெற்றுக் கொள்ளும் வாழ்வின் நீரை மற்றவருடன் பகிர்ந்துக் கொள்வோம். இறைவனின் அன்பு என்னும் கிணற்றிலிருந்து வாழ்வின் நீரைப் பருகுவோம். நமது ஜாடிக்களை கிணற்றண்டையிலி விட்டுச் செல்வோம். அதிலிருந்து அங்கு வரும் மற்றவர்கள் தங்கள் தாகம் தீர அள்ளிப் பருகட்டும். ஆமென்.

இறுதி ஆசீர்:

பாலை நிழலமாகிய நம் வாழ்வின் ஒவ்வொரு கணமும் நம்மோடு இணைந்துப் கபயணிக்கும் இறைவன் நமக்குத் துணிவும் நம்பிக்கையும் அளித்து நம்மை வலுப்படுத்துவாராக

அவர் தமது அன்பாகிய வாழ்வின் நீரை நமக்களித்து நம் வாழ்வைப் புதுப்பிப்பாராக நமது சோதனை வேளைகளில் பொறுமையையும், சாதாரண கணங்களிலும் மகிழ்ச்சியையும், உமக்கு வழங்குவாராக

இறைவனிடமிருந்துப் பெற்றுக் கொண்ட அவரது இரக்கத்தை உலகிற்கும் இறையாசீரை நீங்கள் உங்கள் குடும்பத்தினரோடும், உங்கள் நண்பர்களோடும், உங்கள் பாதையில்

குறுக்கிடும் மக்களோடும் பகிர்ந்துக் கொள்ளும் போது, அவர் உமது காலடியை சரியான வழியில் நடத்திச் செல்வாராக

எல்லாம் வல்ல இறைவன் தந்தை மகன் தூய ஆவியார் உங்கள் இதயத்தை அமைதியால் நிரப்பி, உங்கள் குடும்பங்களை அன்பாலும், உங்கள் வாழ்வை புதுப்பிக்கப்பட்ட பார்வையோடும் பொருளுள்ள விதமாக நிரப்புவாராக ஆமென்.

வழியனுப்புதல்:

உங்கள் வாழ்வின் வழியாக இறைவனை மாட்சிப்படுத்த அமைதியோடு சென்று வாருங்கள்

இல்லத்திற்கு எடுத்துச் செல்ல இனிதான எண்ணங்கள்:

கடவுளின் வாழ்வுத் தரும் தண்ணீரை ஆழ்ந்துப் பருகுவீர்களாக. உங்கள் வாழ்வு நீங்கள் இந்த வாரம் சந்திக்கும் மக்கள் ஒவ்வொவருக்கும் புத்துணர்வையும், நம்பிக்கையையும். அன்பையும் வழங்கும் ஊற்றாக அமையட்டும். எளிமையும், சிறுமையுமாகத் தோன்றும் எந்த சிறிய நற்செயல்களையும் குறைத்து மதிப்பீடு செய்யாதீர்கள். அவையே இன்று தாகத்தால் தவித்துக் கொண்டிருக்கும் உலகில் வாழ்வளிக்கும் ஆறுகளாக பாய்கின்றன என்பதை மறவாதீர்.

==

End of 3rd Sunday of Lent Liturgy